# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2311/29 - 2022 දෙසැම්බර් මස 21 වැනි බදාදා - 2022.12.21

2311/29 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: J/DS/2/9/4/15-2015.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2015/VE/256.

2022.10.26 ஆந் திகதிய 2303/14 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் அரசாங்க அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 7 ஆம் பிரிவின் கீழான பிரகடனத்தில் காணி விபரத்தின் கீழுள்ள.

மேற்குறித்த காணித்துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். சுதர்சன்,
பிரதேச செயலாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.
2022, திசெம்பர் 09.

EOG 12 - 0129

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: AKU/LND/06/L.A/106.
காணி அமைச்சின் இல.: 4/3/13/2019/PC/532.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவின் வெலிகாம கோறளை (வடக்கு) சிறு பிரிவின் அக்குரஸ்ஸ கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவை அதிபர் என்பவரால் தயாரிக்கப்பட்ட முற் பிரதிப்பட இலக்கம் மாற 551 படத்தில் மேலதிக இலக்கம் 09 மற்றும் தாள் இலக்கம் 13 இல் இறுதிக் கிராமப் படத்தில் காட்டப் பட்டுள்ள பின்வரும் காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 225 - காணியின் பெயர்: கொலகஹகெலே மற்றும் கிவுல்தெனிய முகலான; விஸ்தீரணம்: 0.0506 ஹெக்டயார்.**

வடக்கு: துண்டு இலக்கம் 224; கிழக்கு: துண்டு இலக்கம் 44AB மற்றும் 50; தெற்கு: துண்டு இலக்கம் 44AB 50, 50 1/4 மற்றும் 44L; மேற்கு: துண்டு இல. 44L மற்றும் 224.

மேற்குறித்த காணித்துண்டுகளுக்கு உரித்துப் பேசு கின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அக்குரெஸ்ஸ பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. டி. அனோஜா குணரத்ன,
பிரதேச செயலாளர்,
அக்குரஸ்ஸ.

பிரதேச செயலகம்,
அக்குரஸ்ஸ.
2022, திசெம்பர் 19.

EOG 12 - 0272

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: கேடிஎஸ்/கேஜீகே/3/2/2011/02/எல்ஏ.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2011/எச்டபிள்யூ/84.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதிய 1822/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்ட அறிவித்தலில் 'பந்தி 1' இன் பகுதி நீக்கப்பட்டு மற்றும் 'பந்தி 11' இல் மீள் பதிப்பிக்கப்படுகிறது எனத் திருத்தப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

**'பந்தி 1'**

**நீக்கப்பட்ட பகுதி**

ஆ.வ. மஹ. 6233 இல் துண்டு இல. 225

**காணியின் பெயர்: மீகஸ்அங்க, வரி மதிப்பீட்டு இல. 489, வில்லியம் கொப்பல்லாவ மாவத்தை; ஆரம்ப உரிமை கோருபவர்: எஸ். எச். வீரக்கோன்; விஸ்தீரணம்: 0.0709.**

வடக்கு: வில்லியம் கொப்பல்லாவ மாவத்தை மற்றும் துண்டு இல. 224; கிழக்கு: துண்டு இல. 223, வரி மதிப்பீட்டு இல. 483, டபிள்யூ. எம். ஆர். வணிகரத்ன உரிமை கோரும் வில்லியம் கொப்பல்லாவ மாவத்தை மற்றும் அதே காணியின் மிகுதிப் பகுதி; தெற்கு: அதே காணியின் மிகுதிப் பகுதிப் பகுதி மற்றும் மெட கால்வாய்; மேற்கு: மெட கால்வாய் மற்றும் வில்லியம் கொப்பல்லாவ மாவத்தை.

**'பந்தி 11'**

***மீள்பதியப்பட்ட பகுதி***

ஆ.வ. மஹ. 6233 இல் துண்டு இல. 243

**காணியின் பெயர்: - ; விபரம்: பாதை, நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0480.**

ஆ.வ. மஹ. 6233 இல் துண்டு இல. 244.

**காணியின் பெயர்: மீகஸ்அங்க, வரி மதிப்பீட்டு இல. 489, வில்லியம் கொப்பல்லாவ மாவத்தை; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: எச். எஸ். வீரக்கோன்; விஸ்தீரணம்: 0.0229.**

யூ. ஜே. எம். எஸ். எஸ். பி. ஜயசிங்க,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை.
2022, திசெம்பர் 14.

EOG 12 - 0273

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.